உ

# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்த
மான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| புத். 1. | 1910-ளு ஆகஸ்டுமீ 1உ | நெ 4. |

## தோல் ஆங்கிலத்தில் (SKIN) ஸ்கின் என்று சொல்லப்படும்.

மனித சரீரத்தின் உத்திரங்களும் தூண்களுமான எலும்பைப் பற்றி இதுவரையில் சங்கிரகமாக சொல்லிவந்தோம் இப்போது அதன் போர்வையாகிய தோலின் சுபாவத்தையும், பிரயோஜனத்தையும்பற்றி விசாரிப்போம். நமது கண்ணுக்குப்புலப்படும் சரீரத்தின் மேல் பாகத்திலிருப்பதற்குத் தோல் என்று பெயர். இது சரீரத்துக்குள்ளிருக்கும் எலும்பு, தசைநார், நரம்பு, இரத்தாசயம், குடல், நுரையீரல் முதலியவைகளைப் பாதுகாக்கும் ஓர்விதப் பைபோன்ற கவசமாயிருப்பதோடு மழை, பனி, வெயில் முதலியவற்றால் சரீரத்துக்குள்ளிருக்கும் மிக நுட்பமான வஸ்துக்களுக்கு யாதொரு கெடுதியும் உண்டாகா வண்ணம் தடுக்கும் கருவியாகவும் உபயோகப்படுகிறது. இந்தத் தோல் இரு வகைப்பட்டது. மேற்தோலுக்குப் பீத்தோல் (Cuticle,) கியுடிகில், என்றும், அதற்கடியிலிருப்பதற்கு உட்தோல் (Cutis,) கியுடிஸ் என்றும் சொல்லப்படும். மேல் தோலில் இரத்தக்குழாய்கள் நரம்புகள் முதலியவையில்லை. உள் தோலில் மிக நுண்ணிய இரக்தக்குழாய்களும், நரம்புகளும் அளவு சங்கியையில்லாமல் அடர்ந்திருக்கின்றன. மேல் தோல், உள் தோல் இவ்விரண்டிற்கும் மத்தியில் ஒருவித பதார்த்தமுண்டு அதற்கு (Retemucosum,) ரிடிமியுகோஸம் என்று பேர். இது சரீரத்

திற்கு நிறத்தைக் கொடுக்கின்றது. உஷ்ணப் பிரதேசிகளுக்கு இந்தப் பசை கறுத்தும், சீதளப்பிரதேசிகளுக்கு அதாவது ஐரோப்பா கண்டத்தவர்களுக்கு வெளுத்தும், அமெரிக்கா தேசத்தார்களுக்கு தாம்பிர நிறமாயுமிருக்கும். சீதோஷ்ண தேசங்களுக்குத் தக்கவாறு தேசவாசிகள் தேகம் கறுத்தும், வெளுத்துமிருக்கும். உட்தோல் மேல் தோலைவிட அதிக ஆழமும் கனமுமுள்ளது. மேல் தோலிலுள்ள ரோமங்களை நீக்க க்ஷவரகன் கத்தியால் வழிக்கும் போதும், கைகளால் சொரிந்துகொள்ளும்போதும், யாதொரு உபத்திரவமும் உண்டாகாமல் மேற்சொன்ன கத்தி முதலியவை உட்தோலில் படும்போது பொறுக்கமுடியாத வலியும் எரிவந்தமும் உண்டாவதற்குக் காரணம் அத்தோலிலிருக்கும் ஸ்பரிச நரம்புகளும், இரத்தக் குழாய்களுமேயாம். உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையிலும் நமது தேகத்துக்கு மேற்போர்வையாக இருக்கின்ற சருமம் முழுவதும் சற்றேறக்குறைய 70-லக்ஷம் நீர்க்கால்கள் நிரம்பி இருக்கின்றன. இந்த நீர்க்கால்களின் மூலமாகத்தான் தேகத்தின் அசுத்தங்கள் வெளிப்படுகின்றன. தேகம் அதிக உஷ்ணங்கொண்டிருந்தால் வியர்வைநீர் அதிகஅளவாக வெளிப்பட்டுச்சருமத்தின்மீதுத் துளித்துளியாகக் காணப்படும். இன்னும் சருமமானது தண்ணீர் முதலிய திரவ பதார்த்தங்களை உள்ளுக்குள் உறிஞ்சிக்கொள்ளும் சக்தியுள்ளதாயும் இருக்கின்றது. தாக விடாயால் வருந்துவோர் நல்ல தண்ணீர் கிடைக்காதபோது உப்புத்தண்ணீரில் ஸ்நானம் செய்வதால் தாக சாந்தியடைகிறார்கள். பசிப் பிணியால் பாதிக்கப்படுகிறவர்களும், நல்ல தண்ணீரில் ஸ்நானம் செய்தவுடன் களை நீங்கிக் களிப்பெய்துகிறார்கள். இன்னும் மருந்து சாப்பிட அசக்தர்களாயிருக்கும் வியாதியஸ்தர்களுக்கும் அருந்துவதற்கு அருவருப்பான அவுஷதங்களையும் தோலின் மேல் தேய்ப்பதை உங்களில் அநேகர் கண்டும் கேட்டுமிருக்கலாம். தைலங்களைத் தோலின்மேல் தேய்ப்பதினால், ஜன்னி, மேகம், மேகப்புடை, தினவு, வாய்வு முதலிய ரோகங்கள் நீங்குகின்றன. சருமத்தில் வேர்க்குருபோல்காண்பதற்கு பாபில்லி (*Papillae*) என்றுபேர். இவைகளில் ஸ்பரிச நரம்புகளும், ரக்த நரம்புகளும் ஊசி முனை நாட்ட இடமில்லாத அவ்வளவு நெருக்கமாய் வியாபித்திருக்கும். அகத்தோலுக்கடியில் கொழுப்புண்டு. அதில்தான் ஸ்வேதகோளங்கள் (Sudoriparous,) ஸுடோரிபெரஸ், புதைந்திருக்கும். சருமத்தின்கீழ் நிணக்கோளங்களுமுண்டு (Sebiparous glands) ஸெபிபெரஸ் கிளாண்ட்ஸ், அவைகள் ரோமக்கால்களில் ஒட்டிக்கொண்டிருக்கும். அவைகளில் ஜனிக்கிற எண்ணெய்ப்பசையானது ரோமக்கால் வழியாய் வெளிப்படும். இதுவே தோலிற்கு மிருதுவைக் கொடுக்கும். புறத்தோல் எந்த வஸ்துவினால் உறுப்படு

கின்றதோ, அவ்வகைச் சத்தினுற்றான் நம்முடைய நகங்களும் (Nails,) நெயில்ஸ், உண்டாகின்றன. நகத்துக்கும் மேல் தோலுக்கும் வித்தியாசமில்லை. ஆனால் நகமானது கொஞ்சம் வைரத்தையுடையது. மயிருக்குச் சிறிய வேர்கள் உள்தோலிலிருக்கும். அந்த மயிர் வேர்களுக்குப் போஷணை அவைகளைச் சுற்றிலும் ஓடும் இரத்தக் குழாய்களின் வழியாய்க்கிடைக்கின்றது இதுவே மேற்சொன்ன நிணக்கோளங்களாகும். தோலில் இரக்தத்தைக்கொண்டுபோகும் நரம்புகள் கணக்கில்லாமலிருப்பதினால் இதைப் பாதுகாக்கும் விஷயத்தை நாம் அதிகமாய்க் கவனிக்க வேண்டும். அநேகருக்குத் தோலில், வெள்ளை, சிகப்பு, கருப்பு நிறமுள்ள மேகங்களும், தோலில் சுரணையற்றும், வெடித்தும், புண்ணாகியும், கன்னம், கை, கால் தோல்கள் அறுபது எழுபது வயது ஆகுமுன் சுருங்கிப்போயுமிருக்கின்றன. இவைகள் எல்லாம் தோலில் இரக்தம் குறைந்தும், கெட்டுமிருப்பதால் உண்டாகும் உபாதிகளேயாம், தோலைப் பேணும் முறையாவது சுத்த ஜலத்தில் நீராடுவதும், சுத்தமான உடை உடுப்பதும், அளவாக வெளிச்சத்திலும், காற்றிலும் நடப்பதும் வேர்வை பிறக்கும்படி சரீர அப்பியாசம் செய்வதுமாம். பிரதிதினமும் நீராடுவது உடம்பிலுள்ள துவாரங்களின் வழியாய்க் கழியும் கழிவுகள் வெளிப்படும்படி அத்துவாரங்களைச் சுத்தஞ்செய்யும். குளிர்காலத்தில் ஆட்டு ரோமத்தாற் செய்த கம்பளி உடுப்பு உடுத்துக்கொள்வது தோலிலுள்ள சூடு வெளிப்படாமலும், குளிர்காற்று மேலே படாமலும், தடுத்துக் கொள்ளும். "கூழானாலுங் குளித்துக்குடி—கந்தையானாலுங் கசக்கி உடு" என்னும் பழமொழி சுகாதாரம் இன்னதென்பதை எவர்க்கும் உணர்த்துகின்றது.

---

ஜுலை மாத சஞ்சிகையின் 51-வது பக்கத்தொடர்ச்சி

## மனிதர்க்குரியவுணவு.

---

அங்காதிபாத சாஸ்திரமுறையின்படி பார்ப்பின், ஜந்துக்கள் மாம்ஸபக்ஷிணிகளென்றும், புல் பூண்டுண்பவையென்றும், பழங்களையுண்பவையென்றும், எல்லாவற்றையுமுண்பவையென்றும், நான்கு வகைப்படும். ஜந்துக்களின் பற்கள், முன்வாய்ப்பற்களென்றும், சிங்கபற்களென்றும், மூன்றுவகையினவாம். மாம்ஸபக்ஷிணிகளாகிய சிங்கம் முதலியவற்றின் முன்வாய்ப்பற்கள் அதிக பெரியனவாயிருப்பதுமில்லை. ஆனால் அவற்றின் நாய்ப்பற்களென்கிற சிங்கப்பற்கள் மற்ற ஜந்துக்க

ளின் பற்களிலும் அதிகமாக நீண்டு தூரடுகள் போல் வளைந்திருப்பதால் அவற்றைக்கொண்டு அவை தங்கள் ஆகாரத்தைப் பிடித்திழுத்துக்கொன்று தின்னும். மாம்ஸம் தின்கிற மிருகங்களின் கடைவாய்ப்பற்கள் சற்றே கூருயிருக்கின்றதனுல் அவை மாம்ஸத்தை கடித்து நன்ருய்ப் பொடித்துண்ணுவதற்கெளிதாகும். அவற்றின் மேல்வாய் பற்களும் ஒரே வரிசையாய் நடுவே இடைவெளியின்றிருக்கும்.

இது இப்படியிருக்கையில், யானை, குதிரை, பசு முதலிய மரம், பட்டை, புல், பூண்டு, செடி, கொடி முதலியவற்றை உண்ணுகின்ற மிருகங்களின் முன்வாய் பற்களோ, வெளியில் கத்தி முனையைப்போல் கடித்துத்துணிக்கும்படி அழகாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் சிங்கபற்கள் புலி முதலிய சண்டையிடும் துஷ்டமிருகங்களுக்கிருப்பது போல மிகப்பெரியனவாய் வளைந்திராமல் சிறியனவாயிருக்கும். அன்றியும் புலாலுண்ணும் மிருகங்களின் கடைவாய்ப்பற்கள் நுனியில் பரந்திருக்கும். குரங்கு, அணில் முதலிய கனியுண்ணும் மிருகங்களின் பற்கள் திரைதிரையாயும், மூடினுல் நடுவே இடைவெளி இல்லாமலும் அழகாயுமிருக்கும். புலாலையுண்ணும் மிருகங்களுக் கிருப்பது போல இவற்றிற்கு வக்கிர தந்தங்களில்லை. பன்றி, காடி முதலிய கண்டதையெல்லாமுண்ணு மிருகங்களின் முன்வாய்பற்கள் குரங்கு முதலிய கனியுண்ணுமிருகங்களின் பற்களைப்போலவும், சிங்கபற்கள் மாம்ஸமுண்ணும் மிருகங்களின் பற்களைப்போலவும் கடைவாய்ப்பற்கள் கூர்மையாகப் பரந்துமிருக்கும்.

இவ்வாறு வேறுவேருன பற்களுள் மனிதர்களின் பல் எந்தவகைபோனதென்று பார்த்தால் அவர்களுக்கு இன்னவகையான உணவுதான் வேண்டுமென்பதை எளிதிலறியலாம். மனிதரின் பற்களும், குரங்கு, அணில் முதலிய கனியுண்ணும் ஜந்துக்களின் பற்களும் ஒரேவிதமென்ருலும் குரங்கின் பல் சற்றே நீண்டிருக்கும். மனிதரின் பற்கள் ஆடு, மாடு, சிங்கம், காடி, பன்றி, இவற்றின் பற்களுக்கு முற்றும் வேருக ஒருவாறு பழத்தையுண்ணும் ஜந்துக்களின் பற்களையொத்திருக்கும். ஆதலினுல், மனிதரைப் பழத்தையுண்ணுபவரென்று சொல்லலாம்.

ஜந்துக்கள் உண்ணுமுணவு தங்கியிருக்குமிடமாகிய குடலின் அளவைக்கொண்டு அவற்றிற்கு இன்னவிதமான உணவு தான் வேண்டுமென்றுங்காணலாம். ஊனை உண்ணும் பிராணிகளின் குடல் அவற்றின் தேகத்துக்கு மூன்று முதல் ஐந்து மடங்கு நீளமாகவிருக்கும். புல் பூண்டுசளையுண்ணுகின்ற ஜந்துக்களின் குடல் அவற்றின் தேகத்தின்

நீளத்துக்கு இருபது முதல் இருபத்தைந்து மடங்கு அதிகமாயிருக்கும். பழத்தையுண்ணும் ஜந்துக்களுக்கு இந்தக்குடலிருப்பதுமன்றி, இதனோ டொட்டினாற்போல மணிக்குடலொன்று, இரண்டாவது குடலொன்று முண்டு அவற்றின் குடல் தேகத்தின் நீளத்திலும் பத்துப்பன்னிரண்டு மடங்கதிகமாயிருக்கும். மனிதருக்கும் அப்படியேதானிருக்கிறது இத னாலும் மனிதர்க்குரிய உணவு பழமென்று காணலாம். இவ்வாறு பூமி யிலுள்ள பிராணிகளில், பறவையின் வேறுபாடுகளையும், அவற்றின் அளவையும் நன்குய்ப்பரிசோதித்தறிந்த தத்துவ ஸாஸ்திரிகளெல்லோ ருமே ஒரு துணிவாய் மனிதர்க்கேற்ற உணவு மூலவர்க்கந்தானென்றும் அவர்களுக்கு மற்ற ஜந்துக்களின் மாம்ஸம் ஒருபொழுதுமே உணவாகா தென்றும் உறுதியாய்ச்சொல்லுகிறார்கள் ஆதலால் பூமியிலுண்டாகிற பற்பல வகையான தானியங்கள், பழவகைகள், வேர்வகைகள், கிழங்கு கள் மற்றுமுள்ள மூலவர்க்கங்களுமே மனித தேகத்திற்கு அனுகூல மான உணவென்று கொள்ளலாம்.

பிராணி தர்மகுணசாஸ்திரத்தின்படியும் பார்ப்போம் இயல்பாகவே பிராணிகள் தங்களுக்கேற்ற உணவுப்பொருளைக் கண்ணாலே கண்டமாத் திரத்தில் அவற்றிற்கோர் சந்தோஷமும், அவற்றின் மணம் உள்ளே செல்லுகையில் ஆனந்தமும், அவரவர் உண்ணும்போது கொண்டாட்ட முமாயிருப்பதைக் காணலாம். அதிலும் புலி, ஓநாய் முதலிய துஷ்ட மிருகங்கள் தங்களுக்குணவாகும் ஜந்துக்களைக்கண்டால் அவற்றைக்கொ ன்று தின்ன தானாகிப்பாய்வதோடும். யானை, மாடு, குதிரை, மான்முதலிய பிராணிகள் மற்ற ஜந்துக்களைக்கண்டால் அவற்றிற்கு தீங்கொன்றுமே விளைவிக்கிறதில்லை. இவற்றின் நல்லுணவாகிய புல் பூண்டு முதலியவ ற்றோடு சிறிது ரத்தம் பட்டிருந்தாலும், அவற்றை அவை மோர்ந்து பார்ப்பதுமில்லை, குரங்கு, அணில் முதலிய கனியுண்ணும் ஜந்துக்களு க்குப் பழங்களைக்கண்டால் மட்டுமே ஆசை, அவ்வாறே குதிரை, ஆடு, மா டுகளுக்கு நல்ல புல்லையுந்தண்ணீரையுங்கண்டால் ஆசை.

மனிதர்க்கு ஜந்துக்களைக் கொல்லுவதற்கு மனமேயிராது; வேட் டையாடி வாடிக்கைப்பட்டவர்களும், கசாப்புக்காரர்களும் மட்டுமே செ யற்கைவாஷனையினால் உயிர் வதை செய்வதற்கு அஞ்சுவதில்லையேயன்றி மற்றப்படி யாருமே கொல்லத்துணியார். ஜந்துக்களை கதரக்கதர அவற் றின்மேல் காலெல்லாம் ரத்தமாய்ப் பூமியின்மேல் விழுந்து கிடப்ப தைக் குழந்தைகளேயன்றிப் பெரியவர்களும் காணப்போறானன்றோ! புலாலுண்பவர்களிற் பெரும்பான்மையோர்க்கு முதலில் ஜந்துக்களைக்

கொல்லுவது தெரியாமையால் அதில் ஆசை. ஊனையுண்பவர்களுக்கு அதனோடு வேறு சம்பார வர்க்கம் சேர்த்தால் மட்டுமே அது நன்றாய் இருக்கும். காய் கனிகளை உண்பவர்க்கோவெனின் அவற்றை காணும்போதே ஆசையாயிருக்கும். நல்ல ஊறுகாயை கண்டால் அதை யுண்ண நாவில் ஜலம் ஊறுமன்றோ? ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, வால்மிளகு, குங்குமப்பூ இவற்றைக்கண்டால் யார்க்குமே ஸந்தோஷமாயிருக்கும். யார்க்கும் இயல்பாகவே மூலவர்க்கத்தை சேர்ந்த உணவையுண்ணத்தான் ஆசையாயிருக்கும்.

மனிதர்களின் பற்கள் சில மாம்ஸமுண்ணு மிருகங்களின் பற்களை போல் சீக்கிறத்தில் சொத்தை விழுந்துகெட்டுப்போவதில்லை. அன்றியும் அவர்கள் மூச்சுவிடும்போது புலாலுண்ணும் மிருகங்களின் மூச்சுக்காற்றையும் போலத்துர்கந்தம் வீசுகிறதுமில்லை. மூலவர்க்க உணவு நன்றாய்ப்பக்குவஞ் செய்யப்பட்டாலும் படாவிட்டாலும் தேகத்துக்குக்கேட்டை யுண்டுபண்ணும் மேலே கூறியவையனைத்தையும் உண்மையென்று நிபுண வைத்தியர்கள் கண்டறிந்து அப்படியே அனுஷ்டித்துக்கொண்டும் வந்திருக்கிறார்கள்.

---

## மெடிகல் ரேஜிஸ்டிரேஷனும் ஆயுர்வேத வைத்தியமும்.

---

இந்த மெடிகல் ரெஜிஸ்ட்ரேஷன் விஷயமாகச் சிலநாட்களாய் ஆங்கிலப் பத்திரிகைகளின் வாயிலாகப் பலவாறு வியாஸங்கள் வெளி வந்துகொண்டிருக்கின்றன வென்பதையும் அது விஷயமாக செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையும் சென்ற மாத சஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம் அது விஷயமாக பண்டிட், எம். துரைஸாமி ஐயங்கார் சுதேசமித்திரனில் எழுதியிருக்கும் வியாசத்தை இங்கு கூறுகிறோம்.

வைத்தியம் செய்யுந் தொழிலையுடைய ஒவ்வொரு மனிதனும் தனது பெயர் முதலியவைகளை ரிஜிஸ்டர் செய்து லைஸென்சு பெற்று வைத்தியம் செய்யவேண்டும்; என்றாலும் மேல்நாட்டு வைத்திய சாஸ்திரங்களைப் படித்து யூனிவர்ஸிடி பரீட்சையில் தேறி டாக்டர் என்று பெயர் வாங்கினவர்களுக்கன்றி இதர வைத்தியருக்கு இந்த லைஸென்சு கொடுபடக்கூடாது. வைத்தியம் செய்வோர் அனைவரும் அவ்வைத்திய முறைக்கு அங்கங்களான சரீரத்வம் (Physiology & Antomy) பதார்

த்தகுணபாடம் (Materia Medica) ஆரோக்யம் (Hygiene) ரோக நிதானம் (Pathalogy) பிரஸவ சாஸ்திரம் (Midwifery) முதலிய சாஸ்திரங்களைப் படித்திருக்கவேண்டுமென்றும், இம்மாதிரி ஆங்கில வைத்தியம் செய்வோரன்றி மற்றவர் கற்றவரல்லவென்றும், ஆனதால் அவ்வித வைத்தியர்கள் ஜனங்களின் சரீரத்தைக் கெடுத்துவிடுவதற்குக் காரணமாகின்றனர் என்றும், ஆனதுபற்றி இத்தகைய வைத்தியர்களை வைத்தியம் செய்யவொட்டாமல் தகைந்துவிட வேண்டுவது ஜனங்களின் க்ஷேமத்திற்கு மிகவும் அவசியமானதென்றும் ஆங்கில வைத்தியம் கற்றவர் கருதுகின்றனர்.

அவர்கள் சொல்வதிற் சிறு பாகம் உண்மையாகவும் உலகத்துக்கு உபயோகமானதாகவும் இருப்பினும், உண்மையாகாதனவும், உலகத்துக்கு உபத்திரவங்களை யுண்டுபண்ணுபவையாகவும் சில இருக்கின்றன. இவர்கள் எண்ணும் விதமாய் நாட்டு வைத்தியர்களிற் பெரும்பான்மையோர் வைத்திய சாஸ்திரங்களைக் கற்காமலே, விஷயம் தெரியாமலே, அனுபோகமேது மில்லாமலே, வைத்தியம் செய்ய முற்படுவது பெருந்தப்பிதமென்பதை நாமும் அங்கீகரிக்கின்றோம்; ஆனால் அவர்களைப் பார்த்து ஆயுர்வேத வைத்தியர்களிற் பெரும்பான்மையோரான படித்தறிந்து நன்கு அனுபோகமுள்ளவரையும் அதே கண்ணால் பார்ப்பது பகுத்தறிவுக்கு இலக்ஷணமல்ல. ஆயுர்வேத வைத்திய சாஸ்திரங்களைக் கசடறக்கற்ற பலபெரிய ஆயுர்வேத டாக்டர்கள்; இங்கிலீஷ் வைத்தியர்களைவிடப் பல விஷயத்திலும் உலகத்தில் அசாத்தியமான வியாதிகளையும் ஸ்வஸ்தப்படுத்தக் கூடிய அவ்வளவு அதிக திறமையுள்ளவர்களாயிருக்கின்றனர் என்பதை இங்கிலீஷ் வைத்தியரில் பெரிய அனுபோகசாலிகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆயுர்வேத வைத்தியத்தின் சிறப்பு இத்தகையதென்று அறியாத இந்த ஆங்கில வைத்தியர்கள், ஆங்கில வைத்தியம் ஆயுர்வேத வைத்தியம் என்னும் இவ்விருமுறைகளிலும் நல்லறிவுள்ள லெப்டினண்ட் கர்னல் W. G. கிங் M. B., and C. M., D. Ph., C. I. E. I. M. S. (Sanitary Commissioner to the Government of Madras) என்கிற இவர் முதலிய பெரியோரின் கொள்கைகளைச் சற்றேனும் அறிந்திருப்பாராகில் இவ்வாறு சொல்ல இவ்விஷயத்தில் துணிவுபெறமாட்டார்கள். இந்த ஆங்கில வைத்தியர்கள் ஆயுர்வேத சாஸ்திரங்களின் தத்துவங்களைச் சிறிதும் படித்தறியாமலே கண்ணை மூடிக்கொண்டு அது சரியான சாஸ்திரமல்லவென்று சொல்லி, அந்தச்சிறந்த சாஸ்திரங்களையும் அவை செய்து உலகத்திற்

பிரசுரம் செய்த மஹாமேதாவிகளான நமது மூத்தோரையும் இப்பொழுது இச்சாஸ்திரங்களின் தத்துவங்களை யறிந்து மிகப்பெயர்பெற்ற பெரிய வைத்திய நிபுணரையும் அனியாயமாய் அலக்ஷியம் செய்வது எமது மனதில் விசனத்துடன் வியப்பையும் தருகின்றது. நாட்டு வைத்தியத்தை தொலைத்துவிட இவர்கள் முன்வருகிறார்களேயன்றி, அதில் உள்ள சாராம்சம் என்னவென்பதை நிதானித்து யோசிக்க இவர்களில் ஒருவரும் வெளிவரவில்லை. ஆரிய வைத்திய நூல்களையும், அவற்றின் கொள்கைகளையும் உலகில் அழிந்துபோக விடாமல் மேலோங்கச் செய்ய ஆங்கில வைத்தியம் கற்ற நமது சுதேச டாக்டர்கள் அல்லது கவர்ன்மெண்டார் முற்படுகிறார்களில்லையானாலும், அதைச் செழிக்கச் செய்யக் கூடுமானவரையில் உற்சாகத்துடன் பிரவிருத்திக்கும் படித்தறிந்த பெரியவர்களையும் அப்படிச் செய்ய விடமாட்டோமென்று ஆங்கில வைத்தியங்கற்ற நமது இந்தியர் கூட கவர்ண்மெண்டாரைத் தூண்டினரானால், இதைவிட நமது ஜனங்களுக்கும் நமது பூர்வீக சாஸ்திரங்களுக்கும் நமது மூத்தோர்களின் அபாரமான புத்தி வைபவங்களுக்கும் கேடு வேறொன்றும் வேண்டுமோ? படித்தறியாத பாமர வைத்தியர்களை அத் தொழிலிலிருந்து விலக்குவது மாத்திரம் நன்மைக்கிடமாகுமேயல்லாது, படித்தறிந்த விவேகிகளான ஆயுர்வேத வைத்தியரையும் அப்பாமருடைய கணக்கில் சேர்ப்பதென்பது பலவகையிலும் தீமைக்கே இடமாகும். இப்பொழுது ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஆயுர்வேத காலேஜ் முதலியவற்றை நல்ல ஸ்திதிக்குக்கொண்டு வருவதற்கும் அந்த ஸ்தாபனங்களில் சரீரதத்துவம் முதலிய வைத்தியத்திற்கு வேண்டிய சாஸ்திர முறைகளை நன்கு கற்பிப்பதற்கும், இன்னும் பலவிடங்களில் ஆயுர்வேத பாடசாலைகளை யேற்படுத்துவதற்கும் அவற்றின் மூலமாய் நாட்டு வைத்தியர்களின் திறமையை மேன்மைப்படுத்துவதற்கும் இவர்களும் கவெர்ண்மெண்டாரும் முற்பட்டால் பிரயோஜனகரமாகவும் பலவிதத்திலும் நன்மைக்குக் காரணமாகவும் ஆகுமேயன்றி, மற்ற வைத்தியங்களை ஒழித்துவிடவேண்டி முயற்சிசெய்தால் அது இந்தியாவிற்கே பெருங்கேட்டை விளைவிக்கக் கூடியதாகுமென்பதில் சற்றும் சந்தேகமில்லை.

ஆயுர்வேத வைத்தியரையே ஒழித்து விட்டார்களானல் பெரிய நகரங்கள், சிறிய நகரங்கள், இவைகளில் மாத்திரமே யல்லாமல் கிராமாந்தரங்களிலும் ஆஸ்பத்திரிகள் அல்லது இங்கிலீஷ் வைத்தியர்கள் இருக்கவேண்டுவது இன்றியமையாதது. இந்த இங்கிலீஷ் வைத்தியம் செய்வோரைச் சிறு கிராமங்களிற்போய் வசிக்கச்சொன்னால் வசிப்பபார்களா?

இவர்களுக்கு அங்கு வருகிற வரும்படி எந்த மூலைக்கு? அப்படியானாலும் நாட்டுவைத்தியரைப்போல் உள்ளூரில் அகப்படும் பதார்த்தங்களைக்கொண்டு கஷ்டமின்றி மருந்துகள் செய்யவும் உபயோகிக்கவும் இவர்களால் முடியுமா? இவர்களுக்கு இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி முதலிய விடங்களிலிருந்து அழகு அழகாக ஸீல் செய்த பாட்டில்களில் வரும் மருந்துகள் கிடைக்குமாறு இங்கிலீஷ் மருந்து ஷாப்புகள் கிராமங்கள் தோறும் ஏற்பட்ட பிறகல்லவோ ஆங்கிலங்கற்ற வைத்தியர்கள் அவ்வூர்களிற்போய் வைத்தியம் செய்ய முடியும்? இல்லையேல் இவர்கள் கொடுக்கும் பிரிஸ்க்ரிப்ஷன் சீட்டை யெடுத்துக்கொண்டு எங்கென்று ஓடுகிறது? மேலும் யூனிவர்ஸிடி டாக்டர்கள் என்றால் அவர்களுக்கு, வீட்டுக்கு வருவதற்குப் பணம், கைபிடித்துப்பார்ப்பதற்குப் பணம், மூத்திரப் பரீட்சை செய்யப் பணம், பிரிஸ்கிரிப்ஷன் எழுதிக் கொடுக்கப்பணம் இவ்வளவும் கொடுத்துவிட்டு மருந்து ஷாப்புக்கும் ஒன்றுக்குப் பத்தாய்க் கொடுக்க, கிராமாந்தரத்தில் வசிப்போரும் மற்ற எளிய ஜனங்களும் எவ்வாறு சக்தியுள்ளவர்களாவார்கள்? ஆயுர்வேத வைத்தியர்கள் அந்தந்த ஜனங்கள் அந்தந்த ஊர்கள் முதலியவைகளுக்குத் தகுந்த விதமாய்ப் பற்பல முறைகளைச்சொல்லி மருந்துகளை இலவசமாகச் செய்விக்கின்றனர்.

நாட்டு வைத்தியர்கள் பல தடவை ரோகிகளைக் கெடுத்து விடுகின்றனரென்றால், அத்தகைய மூடர்கள் ஆங்கில வைத்தியரிலும் இல்லையென்று எவரேனும் நிச்சயமாய்ச் சொல்லக்கூடியவருண்டோ? ஆங்கில வைத்தியர்கள் ஸாமர்த்தியசாலிகளென்றால் அம்மாதிரி வைத்தியர் ஆயுர்வேத வைத்தியரிலும் பலர் இருக்கின்றனர். சாதாரண ரோகங்கள் கூட இங்கிலீஷ் வைத்தியர் (ஸமர்த்தர்) பார்த்துக் கைதவறிபோவனவுமுண்டு. பெரிய ரோகங்கள் இங்கிலீஷ் வைத்தியத்தால் பிரயோஜனப்படாமல் ஆயுர்வேத வைத்தியத்தால் சுகப்பட்டதுமுண்டு. நன்றாய் யோசிக்கப்போனால் நம் இந்திய நாட்டில் ஆங்கில வைத்தியம் இல்லாமற் போனாலும் ஆயுர்வேத வைத்தியம் இல்லாமல் ஒரு க்ஷணமும் இருக்க முடியாது. எத்தனை ஆஸ்பத்திரி ஏற்படுத்தினாலும் இந்த வைத்தியரால் இருக்கும் பிரயோஜனங்களுக்கு ஒருக்காலும் ஈடாகாது.

அனேக நாட்களுக்கு முன் ஏற்பட்ட இவ்வாயுர்வேத சாஸ்திரம் இக்காலத்திய ஜனங்களுக்கு உபயோகப்படாது என்று சொல்வது வெகு விசித்திரமாயிருக்கிறது? அந்த சாஸ்திரத்தில் காலங்களுக்கும் தேசங்களுக்கும் ஏற்றவாறு வெவ்வேறு வித ஏற்பாடுகள் வெகு ஆச்சரியகரமாய்ச் சொல்லியிருப்பதை இவர்கள் அறியாமல் இப்படிச் சொல்லுகின்றனரே என்று விசனப்படுகிறோம். அப்படியானாலும் மேல் நாட்

டாருடைய சுபாவம் முதலியதற்கேற்றவாறு ஏற்படுத்திய சாஸ்திரங்களைப் படித்துவிட்டுக் கீழ்நாட்டாருக்கு ஒத்துக்கொள்ளாத அந்த விதமான சிகிச்சையைச் செய்வதற்கு இவர்கள் எப்படி முன் வருகிறார்கள்?

இப்பொழுது சென்னையில் இரண்டு ஆயுர்வேத இன்ஸ்டிட்யூஷன்கள் ஏற்பட்டு அவற்றில் மாணுக்கர்கள் வைத்தியம் கற்கும் முறைகளைப் பார்த்தாற் மேற்சொன்னவாறு ஏற்பாடுகள் செய்யாமல் வேறு விதமாயும் முயற்சி செய்யக்கூடும் போலிருக்கிறது. இப்பொழுது நமது கவர்ன்மெண்டார் இத்தேசத்திற்கு நன்மை செய்ய இச்சிப்பார்களானால் இப்பொழுது இருக்கும் ஆயுர்வேத இன்ஸ்டிட்யூஷன்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் செய்யவேண்டுவதுடன், அவ்வித இன்ஸ்டிட்யூஷன்களை இன்னும் அனேக விடங்களில் ஏற்படுத்தவும் முயலவேண்டும். அந்த இன்ஸ்டிட்யூஷன்களில் படித்து டிப்ளோமா பெற்றிருக்கும் ஆயுர்வேத டாக்டர்களையும் லைஸென்சு பெறயோக்கியதையுள்ளவரென நிர்ணயிக்கவேண்டும். இல்லாமற்போனால், இங்கிலீஷ் வைத்தியம் செய்துகொள்ளச் சக்தியற்ற ஜனங்கள் நிர்க்கதியாய் வைத்தியம் என்னும் பெயரையும் சொல்லாமல் சாகும் வரையிலும் ரோகத்துடன் வாதனைப்படவேண்டியது தான் கதியென்று நிச்சயித்து, தைரியமும் ஒடுங்கிப்போய் அதோகதியாய் விடுவார்கள். அப்பொழுது 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்பது திண்ணம்.

## மின்சாரத்தால் தோட்டப்பயிர் செய்தல்.

மின்சாரமென்பது சாஸ்திரீய (Scientific) முறைகளால் ஒரு வஸ்து இயக்கும் ஒருவகை சக்திக்குப் பெயர். மின்சார விசையினால் ஆகும் காரியங்கள் அனேகமிருக்கின்றனவெனினும், இந்தியாவின்கண் இன்னும் வெளிவராத பற்பல விநோதமான செயல்களை மானிடருக்கு மிக்க உபயோகமாகும்படி மேற்றிசையிலுள்ள, ஐரோப்பியரும் அமெரிக்கரும் கண்டுபிடித்துத் தம் நாடுகளில் நடத்திவருகிறார்கள். அப்படி நடத்தி வருவதில் மின்சார விசையைக்கொண்டு பசுக்களிடமிருந்து பால் கறப்பதொன்று, கறந்தபாலைக் கட்டியாக்கித் தகரம், பீங்கான் போன்ற டப்பிகளில் அடக்கி விற்பனைக்குத் தயாராயிருக்கும்படி செய்வது மற்றொன்று; இப்படியாக பலவிதமாய் நவீன செயல்முறைகளை அத்தேசத்தவர் கண்டுபிடித்திருப்பதுடன், இப்போது தோட்டப்பயிர் செய்வதிலும் (Gardening) மின்சார விசையை உபயோகப்படுத்தலா

மென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். செடிகளைப் பயிராக்குவதில் மின்சார விசை எப்படி உபயோகமாகுமென்று பலர் சந்தேகிக்கக் கூடுமானாலும், இன்றைக்கு 160-வருஷங்களுக்கு முன்னர்ப் பரீக்ஷார்த்தமாக முதல் தடவையாய் மின்சார விசையைச் செடிகளில் பிரயோகித்து அவைகளைச் செழிக்கச் செய்வதிலும், புஷ்பிக்கச்செய்து காய்பழங்களைச் சீக்கிரம் உண்டாகும்படி செய்வதிலும் ஆராய்ந்தறியப்பட்டது. தற்காலம் மின்சார விசையைக்கொண்டு பயிராக்கப்படுவதை மூன்று தேசங்களில் வெகு அதிகமாக அனுசரித்து வருகிறார்கள். முதலாவது ஐரோப்பாவிலுள்ள பிரான்சு தேசம். கண்ணாடியினால் கூண்டுகள் கட்டி அவையினுள் விளக்குகளை வைத்து, வேறு சில யந்திரங்களின் உதவியைக்கொண்டு மின்சார விசையை உற்பத்தி செய்து தோட்டப்பயிரை விருத்தி பண்ணுவதில் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஜர்மனி தேசத்தில் "எலெக்டிரிக் கர்ரெண்டு" என்ற மின்சார விசையைச் செடிகளின் வேர்களிடம் விட்டுப் பரீக்ஷை பார்க்கின்றனர். இங்கிலண்டில் உவ்ஷாம் என்னுமிடத்திலிருக்கும் பண்ணையில் மின்சார விசையைச் சென்னை டிராம் வண்டிகளுக்கிருப்பதை யொப்ப கம்பங்கள் நாட்டித் தலைக்கு மேலான உயரத்தில் செம்புக் கம்பிகள் மூலமாய்ப் பூஸாரத்திற்கு விசையைக் கொண்டுபோய் விட்டுப் பரீக்ஷிக்கின்றனர். இவ்விதமான உயரக்கம்பிகளால் விசையைப் பூமியில் விடுவதனால் அதிக பலத்தைச் செடிகளுக்குக் கொடுக்கலாமென்று 1746-வது வருஷத்தில் பேய்ம்பரே என்ற ஸ்காட்லண்டு தேசத்தவர் கண்டுபிடித்தாசரித்து வந்தனர். இதை 1885-வது வருஷத்தில் ஹெல்ஸிங் போர்ஸ் யூனிவர்ஸிடியைச் சேர்ந்த கலம்ஸ்ட்ராம் என்ற போதகாசிரியர் அனுசரித்து வந்தது காரணமாகவும் இம்முறையினால் பலன் அதிகமாகக் கிடைப்பது நிச்சயமென்று ஏற்படுவதினாலேயும், இச்சமயம் மின்சாரவிசையைத் தோட்டங்களில் பிரயோகிப்பது பிரான்சு, இங்கிலாண்டு, ஜர்மனி ஆகிய இம்மூன்று தேசங்களிலும் அபரிமிதமாகத் தோட்டக்காரரது வழக்கமாகயிருக்கின்றது. பருவமழை பெய்யாது மோசஞ்செய்துவிட்ட காலத்தும் மின்சாரவிசை சம்மந்தமாயுள்ள தோட்டங்களில் பேரிக்காய்கள், உருளைக்கிழங்கு, பட்டாணிக்கடலை. பின்னுமிரண்டொரு கந்தமூலாதிகள் வெகு வெள்ளாமையுடன் செழிப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால் நாகரீகத்திலும் விஷயா விஷயங்களைச் சூக்ஷமாய்க் கண்டறிவதிலும் அதிக கவனஞ்செலுத்தி 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற பழமொழிப்படி நாளுக்கு நாள் சாஸ்திரீய முறைகளில் மேம்பாடடைந்துவரும் மேற்றிசையாரை யொப்ப நம்மிந்திய தேசத்தவர் வளம்பெறவாழ்வதெக்காலமோ ஈசனே அறிவர்.

## வைத்திய குறிப்புகள்.

---

நகச் சுற்று அல்லது உகிர்ச் சுற்று :—இது நகக் கண்களில் வீக்கங்கொண்டு பருவைப்போல் தோன்றி அதிக பாதையை உண்டாக்கும். இதற்குப் புளிச்சக் கீரையில் விளக்கெண்ணெய் தடவி அனலில் வாட்டி விரலில் உபத்திரவமுள்ள விடத்தில் சுற்றி காற்றுப்படாமல் கட்டி வைக்கவேண்டியது.

---

பிளேக் நோயைப் பரவச் செய்யும் புழு :—அஸ்ஸாம் நாட்டைச் சேர்ந்த ஹாபிகஞ்ச் சப் டிவிஷனில் வெற்றிலையின் மேல் ஒரு விதப் புழுக்கள் காணப்படுகின்றனவாம். அப்புழுவைத் தெரியாமல் வெற்றிலையோடு சேர்த்து சாப்பிட்டு விடுவார்களானால் பிளேக் நோய் அவர்களுக்குப் பரவி விடுவதாய்ச் சொல்லப்படுகிறது.

---

ஐஸ்க்ரீம் அருந்தியதால் ஆபத்து :—இட்டாலி தேசத்தின் கிழக்கிலுள்ள ராவண்ணா டிஸ்டிரிக்டில் அழுகின கோழிமுட்டைகள் கலந்து செய்த ஐஸ்கிரீமை யுண்டதனால் 800-பேர் வியாதியுற்றுப் போனார்களென்று தெரிகிறது, இவர்களில் 9-பேர் இறந்துவிட்டார்களென்றும், 70-பேர் அபாயகரமான நிலையில் இருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

---

ஆகாரம் புசிப்ப தெப்படி :—எந்த வஸ்துவையும் செம்மையாய் மென்று தின்றால் சீக்கிரத்தில் ஜீரணமாய்விடும். (Lauder Pruntan) லாடர் பிரண்டன் என்னும் டாக்டர் தமக்கு 32-பற்களிருப்பதால் சாப்பிடக்கூடிய எந்த பதார்த்தத்தையும் 32-தடவை மென்று சாப்பிடுகிற வழக்கத்தை தாம் அனுஷ்டித்து வந்ததால், தான் நோய் என்னும் கஷ்டத்திற்குள்ளாகாமல் சுகமாய் இருந்ததாக கூறியிருக்கிறார்.

---

காயம் அல்லது விரணம் :—கீழே விழுந்து காயமுண்டானால் வெங்காரத்தை மெல்லியதாய்ப் பொடி பண்ணி தேங்காயெண்ணெயில் குழைத்துப் போடவும். வேறு காயமானால் ஒடிக்கோலனைத் துணியில் நனைத்து காயத்தின்மேல் போடவேணும். துணி உலர்ந்துபோனால் 5, 6-தடவை ஒடிக்கோலனை அதில் விட்டு துணி உலராமல் நனைத்துக் கொண்டிருக்கவும். காயத்தில் சீழ் பிடிக்காது ; சீக்கிரத்தில் ரணம் ஆறிவிடும்.

---

பாம்புக் கடிக்கு கெரோஸின் ஆயில் :—பாம்புக்கடிக்கு மண்ணெண்ணெய் என்னும் கெரோஸின் ஆயில் நல்ல மருந்தாகும். பாம்பு கடித்தவுடனே கடித்த இடத்தைக்கெரோஸின் எண்ணெயில் அமிழ்த்தி வைத்தால் புகை புறப்படுவதுபோல் கடித்த இடத்திலிருந்து பச்சையாக ஆவிபோல் ஒன்று வெளிப்படுமாம். இது எண்ணெயோடு சம்பந்தப்படாது. ஆனாலும் எண்ணெயில் கண்ணுக்கு நன்றாய்த் தெரியுமென்று ஓர் டாக்டர் சொல்லுகிறார்.

ஸ்நானத்துக்குக் கூட்டு:—சோற்றுப்பு பலம் 2, கற்பூரம் ½ அவுன்ஸ் நவச்சாரம் ½-அவுன்ஸ் இம்மூன்றையும் 24-அவுன்ஸ் பிடிக்கும் ஒரு புட்டியில் போட்டு அது நிறைய வென்னீர்விட்டு காற்குபோட்டு குலுக்கி வைத்துவிட்டு 24-மணி நேரம் சென்ற பிறகு, அதை செம்மையாய்க் குலுக்கி அதில் அரை அவுன்ஸ் எடுத்து கொஞ்சம் ஜலம் கலந்து தேகத்தில் தேய்த்து ஸ்நானம் செய்தால் தேகத்திலுள்ள அழுக்கெல்லாம் எடுபட்டு ஆரோக்கியமுண்டாகும்.

---

கண்ணை மூடிக்கொண்டிருந்தாலும் பிரகாசம் தோன்றுவானேன்:—நாம் கண்ணைக் கெட்டியாக மூடிக்கொண்டால் இருட்டாய் இருக்கும். ஆனால் மூடிய கண்ணைச் சிறிதுநேரம் கையால் தேய்த்துக் கொண்டேயிருந்தால் கண்ணுக்கு எதிரில் ஓர் பிரகாசமான ஒளி சுழல்வதுபோல் தோன்றும். இருந்தாற்போலிருந்து கண்முன் எதேனும் தாக்கினால் தளதளவென்று ஒளிப்பொறிகள் பறப்பதுபோல் காணப்படும். இதற்குக் காரணம் மூளையிலிருந்து கண்ணுக்கு வரும், பார்வை நரம்பில் ஏற்படுகிற சலனத்தினால் மூளையில் உண்டாகும் ஓர் வகை மயக்கமேயாகும்.

---

ஈரவெங்காயத்தின் சிலாக்கியம்:—விஷக்காற்றைக் கிரகித்துக் கொள்ளும் சக்தி ஈரவெங்காயத்துக் குண்டென்பது முன்பே இந்தியர்களுக்குத் தெரிந்த விஷய மென்றாலும், இப்போது நன்கு ரூபிக்கப் பட்டிருக்கிறது. வட இந்தியாவில் விஷபேதியாவது, பெரியம்மையாவது தோன்றியபோது ஈரவெங்காயத்தை மாலையாகக் கோர்த்து வீட்டு முகப்பில் தூக்கி வைப்பது ஜனங்களின் வழக்கம். இந்த வழக்கம் மிகவும் நன்மையான தென்றும், விஷக்காற்றை ஈரவெங்காயம் கிரகித்துக்கொள்கிற தென்றும் ஐரோப்பிய சாஸ்திரிகளிப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். வேப்பிலைக்கும் இதே சக்தியுண்டென்று தமிழ் வைத்திய நூல்கள் கூறுகின்றன.

---

வென்னீர்பாகம்:—வென்னீரானது அநேகவியாதிகளை சௌக்கியப்படுத்துகிறதென்பது உலகப்பிரசித்தம். அநேகருக்கு வென்னீர் செய்கிற பாகம் தெரியாது. டாக்டர், டெல்மானிகோ, (Dr., Delmonico) வென்னீரை பாகத்துடன் செய்து பாட்டில் ஒன்றுக்கு 25-சதத்திற்கு விற்று வந்திருக்கிறார். அதில் அநேக வியாதிகள் சௌக்கியமாயிருக்கிறது. பாகம்:—பாத்திரத்தை சுத்தமாய்க் கழுவி அடுப்பில் வைத்து காய்ச்சி செம்மையாய் சூடு வந்தபிறகு அதில் ஜலம் வார்த்து ஒரு கொதி வந்தவுடன் இறக்கி உபயோகித்துக்கொள்ளவும். அதிகமாய் சுடவைப்பதினால் ஜலத்தின் குணத்தைத் தரத்தக்க சத்து தீய்ந்து ஆவியாய்ப் போய்விடுகின்றது.

---

பருத்திக்கொட்டை மாவு:—கோதுமை மாவைவிடப் பருத்திக் கொட்டை மாவு உடம்புக்குப் புஷ்டிதரக் கூடியதென்று மிஸ்டர் அலிசன் என்பவர் பரிசோதித்துப் பத்திரிகைகளுக்கு எழுதுகிறார். இறைச்சியைப்போல பருத்திக்கொட்டை மாவு மஸ்துள்ளதாய் இருப்பதோடு, உடம்புக்கொத்ததாயும் கோதுமை மாவைவிட எளிதில் ஜீரணமாகக் கூடியதாயும் இருக்கிறதாம், டல்லாஸ் டிஸ்டிரிக்டில் ஜனங்கள்

அநேகமாய் கோதுமையைவிட்டு விட்டுப் பருத்திக்கொட்டை மாவை உபயோகிக்கிறார்களாம். இந்த மாவை உண்டுபண்ணும் பொருட்டு மிஸ்டர் அலிசன் ஒரு யந்திரசாலை (Factory) ஏற்படுத்தியிருக்கிறாராம். இந்த மாவு தயார் செய்வதற்குக் கோதுமை மாவு தயார் செய்வதில் ஏற்படும் செலவில் பாதி செலவே யாகுமென்று சொல்லுகிறார்.

---

வென்னீரின் உபயோகம்:—வென்னீரை வைத்தியத்துக்குக் கையாளாதவர்கள் ஒருவருமில்லை. வயிற்றுநோய், மார்நோய், மூச்சடைப்பு, கீல்வாய்வு, தொண்டைநோய் இவைகளுக்கு சாதாரணமாய் வென்னீரை உபயோகப்படுத்தி சுகமடைவதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? அப்படிக்கிருந்தாலும் வைத்தியர் சொன்னபடி உபயோகிக்க வேண்டுமேயல்லாமல் அவரவர்களுக்குத் தோன்றினபடி வழங்கினால் சிகிச்சா உபசாரமாகாமல் விபரீதமாய் முடியும். குழந்தைகளுக்கு நெஞ்சில் கபம் கட்டியிருந்தால் ஒரு கம்பளித்துண்டை பொங்கக் காய்ந்த வென்னீரில் தோய்த்துப் பிழிந்து கழுத்தைச்சுற்றி ஆவியிருக்குமளவில் சுற்றிவைத்தால் பத்து நிமிஷத்தில் அந்தக் கபம் கரைந்துபோகும். பல்நோய் கண்டாலும், சைத்தியத்தால் கன்னத்தில் நரம்பு நொந்தாலும் வென்னீர் ஒத்தடம் கொடுக்க லகுவாகும். தலைநோய் கண்டால் கால்களை வென்னீரில் வைத்துக்கொண்டு பிடரியிலும் வென்னீர் ஒத்தடம் கொடுத்தால் நீங்கிப்போகும். பித்தநீர் வெளிப்படுத்த வேண்டுமானால் வென்னீரை உட்கொள்ளவேண்டும். நகத்தைச்சுற்றி உண்டாகும் உகிர்சுற்று என்னும் புண்ணுக்குப் பொறுக்கப் பொறுக்கப் புண் விரலைத் தோய்த்தெடுத்தால் சீக்கிரத்தில் ஆறிப்போய்விடும். கட்டிகளையும், ரணங்களையும் வென்னீரால் அலம்புவதே உபசாரமாகும்.—(வி. போ)

---

சீனக்காரம்:—இது பார்வைக்கு வெண்ணிறமாயும், (Crystallized) ஸ்படிகம் போன்றதாயும் வாயில் போட்டால் கரிப்பாயுமிருக்கும். இது உடம்பிற்குக் கெடுதிசெய்யும் பதார்த்தமல்ல. உள்ளே சேர்ந்தாலும் யாதொரு குற்றமுமில்லை. இதனால் இதை உள்ளே சேர் என்று பொருள்படாது, இதற்கு சுதேச வைத்தியத்திற்கு ஏற்ற குணங்கள் உண்டு.

1. பல்வலி, பல்லில் உள்ள புழுக்கள் ஒழிவதற்கு, கொட்டாங்கச்சியைச் சுட்டுப் பொடிசெய்து அப்பொடி இரண்டு பாகமும் சீனக்காரம் ஒரு பாகமும் சேர்த்துக் காலையிலும் மாலையிலும் தேய்த்து வர, ஒரு வாரத்திற்குள் குணம் தெரியவரும்; அல்லது சீனக்காரத்தை வாயில் போட்டு மென்று அதன் ஜலம் வர வர வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய்க் கீழே உமிழவும்.

2. மூக்கினின்று இரத்தம் வருதலுக்கு, சீனக்காரத்தைப் பொடி செய்து ஜலத்தில் சேர்த்து மேலே தடவினால் குணம் உண்டாகும்.

3. கண்வலி கண்ணிலிருந்து ஜலம் வடிதல் முதலானவைகளுக்கு (Rose water) பந்நீரில் சீனக்காரத்தைப் பொடி செய்து போட்டு ஜலத்தைக் கண்ணில் ஊற்றுவதினால் குணமுண்டாகும்.

4. பிள்ளைகளுக்குச் சீனக்காரம், பசுவெண்ணெய், பச்சைக் கற்பூரம், (Indian Pomattum) இந்தியன் பொமாட்டம் என்னும் மெழுகு, இவைகளைச் சேர்த்துத் தடவி வந்ததில் குணம் கண்டிருக்கிறது.

வெந்நீர் :—நாம் உட்கொள்ளும் ஜலமானது எப்பொழுதும் உஷ்ணமாயிருக்கவேண்டும். ஜலத்தில் நம் கண்களுக்குப் புலப்படாத் புழுக்கள் இருப்பதாகவும் ஆதலால் ஜலத்தை உஷ்ணம் செய்து பானம் பண்ணவேண்டுமென்றும் பெரியோர்கள் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். இது மிகவும் உண்மையே, குளிர்ந்த ஜலத்திற்கு யாதொரு குணங்களும் இல்லை. உஷ்ணம் செய்தால் அதன் குணங்கள் தெரியவரும்.

1. காங்கையைக் குளிர்ந்த ஜலம் கொஞ்சம் கொஞ்சமாய் விருத்தி செய்கிறது. வெந்நீரைப் பானம் பண்ணினால் காங்கை கொஞ்சம் கொஞ்சமாய்த் தணிய ஆரம்பிக்கும்.

2. கண்ணில் உண்டாகும் கிருக்கிக் கட்டிகளுக்கு, சூடான ஜலத்தில் பசுவெண்ணெயைப் போட்டு அந்த ஜலத்தை ஊற்றி வருதலால் சீக்கிரம் குணமுண்டாகும்.

3. சொறி சிரங்குகளுக்கு வெந்நீரில் ஸ்நானம் செய்தல் நலம் உஷ்ணத்திற்கு உஷ்ணம் சேர்ந்தால் தான் வியாதி சீக்கிரம் குணமடையும்.

4. வயிற்று வலிக்கு வெந்நீரை ஒரு பாத்திரத்தில் விட்டு வயிற்றின் மேலே ஒற்ற ஒற்றக் குணமுண்டாய் வலி நிற்கும்.

DR. S. V. SURMA, A. V. M. S.,

---

## வர்த்தமானங்கள்.

உப்பு :—போனவருஷம் ஏப்பிரல், மே மாதங்களில் இந்திய ஜனங்கள் தின்ற உப்பைவிட இந்தவருஷம் அதே மாதங்களில் அன்னார் தின்ற உப்பு 15,000-மணங்கு அதிகமென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

---

பிளேக் கமிட்டி :—சிம்லாவில் கூடி விசாரணை நடத்திக்கொண்டிருந்த பிளேக் கமிட்டியார் தங்கள் வேலையை முடித்து விட்டார்கள். அக்கமிட்டியார் தங்கள் சிபார்சுகளைக் கூடிய சீக்கிரம் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிவிடுவார்கள்.

---

**கோதுமையும், அரிசியும்** :—உலகத்தில் எவ்வளவு கோதுமை உண்ணப்படுகிறதோ கிட்டதட்ட அவ்வளவு அரிசியும் உண்ணப்படுகிறதென்று தெரிகிறது. 19000 கோடி பவுண்டு (lb.) கோதுமையும் 17500 கோடி பவுண்டு அரிசியும் உலகத்தில் விளைவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

---

நியூயார்க் தெருக்குப்பைகள் :—சென்ற வருஷம் நியூயார்க் தெருக்களில் கூட்டியெடுத்த குப்பைகள் 468000 பவுனுக்கு விலைபோயினவென்று சொல்லப்படுகிறது. இதில் பழைய கண்ணாடிப்புட்டிகள் 3600 பவுனுக்கும் கொழுப்பு 5000 பவுனுக்கும் இருந்தன, மீதியெல்லாம் சாம்பல்.

நூதன செடிகளைச் சேர்த்தல்:—அமெரிக்கர் 1909-ஞு எப்பிரல் மாதம் 1தேதிமுதல் ஜூன்மீ 30தேதி வரை 8, நூதன செடிகளையும் வித்துக்களையும் அயல் நாடுகளிலிருந்து தங்கள் தேசத்திற்கு கொண்டு போய் பயிர் செய்திருக்கிறார்கள். முதலிலிருந்து 25,717 புதிய செடிகள் அந்நாட்டாரால் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. நம்மவர்களோ கேட்பானேன்? எவ்விஷயத்திலும் அமரிக்கர் அதிசாமர்த்தியமுள்ளவர்களே.

---

வைத்திய இலாகா உயர் பதவி உத்தியோகங்களும் பிரைவேட் பிராக்டிஷனர்களும்:—வைத்திய இலாகாவில் சிலஉயர் பதவி உத்தியோகங்களை பிரைவேட் பிராக்டிஷனர்களுக்கும் (சொந்தத்தில் வைத்தியஞ்செய்யும் டாக்டர்கள்) வேறு சிலருக்கும் கொடுப்பதைப்பற்றிய யோசனை இன்னும் கவர்ன்மெண்டாருக்கு இருந்துகொண்டு வருவதாய்த் தெரிகிறது. அவ்விஷயம் முடிவு செய்யப்படுவதற்கு முன்னே இந்தியா மந்திரியிடமிருந்து ஒரு உத்திரவு வந்திருக்கிறது. அதனில் கல்கட்டா மெடிகல் காலேஜில் ஒரு போதகாசிரியர் ஸ்தானம் பிரைவேட் பிராக்டிஷனர்களுக்கு தனியே வைக்கப்படவேண்டுமென்று இந்தியா மந்திரி சொல்லியிருக்கிறார்.

---

அமேரிக்காவில் இந்துக் கோவில்:—ஸான் பிரான்ஸில் ஓர் இந்து தேவாலயம் 60 ஆயிரம் டாலர் செலவழித்துக் கட்டப்பட்டிருக்கிறது. [டாலர் ரூபா. 3—2—0 மதிப்புள்ள நாணயம்] தோற்றத்தில் அது இந்துக்கோவிலும், கிறிஸ்தவர் சர்ச்சும், மகம்மதியர் மசூதியும், ஹிந்து மடமும், அமெரிக்க வீடும் எல்லாம் கலந்தது போலிருக்கிறது. இந்தக் கோவிலில் 100-பேர் வரையில் வந்து போகிறார்களென்றும் இந்த மடத்தில் அமெரிக்கர்கள் உள்பட 7 பேர்கள் கைங்கரியம் செய்துகொண்டு ஹிந்து மதத்தைக் கற்று அதை யப்பாகங்களில் பரப்ப முயன்று கொண்டிருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. இந்தக் கோவிலில் நம் தேசத்திலிருக்கும் கோவில்களில் போலப் பசுவின் சாணமோ, வானரங்களோ, அசங்கிதமான சித்திரங்களோ தேவதாசிகளோ, விக்கிரகங்களோ கிடையாது. இயேசு கிறிஸ்துவின் ஒழுக்கமும் நீதிகளும் அங்கு கற்பிக்கப்படுகின்றன.

---

## விசித்திர விஷயங்கள்.

புஷ்பத்தால் செய்த ஒரு நவீன கெடியாரம்:—ஐரோப்பாவில் பிரிடிங்டன் என்னுமிடத்தில் ஓர்வகைப் புஷ்பத்தினால் 12-அடி உயரத்தில் ஒரு கெடியாரம் செய்திருக்கிறார்களாம். இதற்குப் பிடித்த புஷ்பம் பத்தாயிரமாம்.

---

வாழைப்பழத்தோலில் சோப் செய்கிறது:—ஆப்பிரிக்காவின் மேற்கு பாகங்களில் வெள்ளையரும் சுதேசிகளும் பனானஸ் (Bananas) என்ற வாழைப்பழங்களின் தோலைச்சுட்டு சாம்பலாக்கி அதோடு தண்ணீரையும் பனையெண்ணெயையுஞ் (Palm oil) சேர்த்து சோப்பாக உபயோகிக்கிறார்களாம். நாம் வீணானவை என்று எறிந்து விடுகிறதெல்லாம் உபயோகமாகிறது.

**உயரமான கோபுரம் :**—உலகிலுள்ள கோபுரங்களிலெல்லாம் உன்னதமான கோபுரமானது நியூயார்க்பட்டணத்தில் கட்டப்படபோகிறதாம் அது 62-அடுக்குடையதாம் 900-அடி உயரமுள்ளதாம், அதன் மாளிகை 34-அடுக்குடையதாய் எழுப்பப்பட்டு அதற்குமேல் 18-அடுக்குள்ள கோபுரம் கட்டப்படுமாம். இந்தக்கட்டிடம் முடிவுபெறின் இதனிலும் பெரிய கட்டிடம் உலகில் வேறெங்குமிராதுபோலும்.

---

**பேரும் அலைகள் :**—சமுத்திர அலைகளின் விசேஷம் வடஅட்லாண்டிக் சமுத்திரத்திலே மிகுதியும் பிரமாண்டமானது என கருதப்பட்டிருந்தது. இங்கத்திய அலைகள் சுமார் 20-முதல் 25-அடி உயரம் வரை எழும்புவதாக கணக்கிடப்பட்டுள்ளது. ஆனல் இப்போதோ ஆப்பிரிக்காவின் தென்கோடியான நன்நம்பிக்கை முனையில் வடமேற்குத் தென்றலினுல் உண்டாகும் அலைகள் சுமார் 40-அடி உயரமெழும்புவதாய் இப்போது கணக்கிடப்படுகிறது.

---

**கண்ணுடியால் செய்யப்படுகிற விநோத இடிமயிர் :**—நம் மிந்திய தேசத்தில் மயிரில்லாத ஸ்திரீகள் கடைகளில் இடிமயிர் என்று அழைக்கப்படும் சடைகளை வாங்கி கட்டிக்கொள்ளுகிற வழக்கத்தைப் போல ஐரோப்பாதேசங்களிலும் மயிரில்லாதவர்கள் அப்படி செய்கிறது வழக்கம். இப்போது அச்சீமைகளில் இடிமயிர்மிகவும் அருமையாயும் கிராக்கியாயுமிருக்கிறபடியினுலே, தற்சமயம் கண்ணுடிகளை வேலைப்பாடுசெய்து அதுகளினின்று மயிர் இழைகளாக வருவித்து இடிமயிராகச் செய்து விற்கிருர்களாம். அது அதிக மிருதுவாயும், கெம்பீரமாயும், மனோரம்மியமாயும், பளபளப்பாகவும் இருக்கின்றனவாம்.

---

**வயல் அரசர் :**—ஆஸ்திரேலியாவில் சுமார் இங்கிலாந்தின் 5-பாகத்திலொரு பாகத்தை வயல் கட்டி 60-ஆயிரம் கால் நடைகளை வைத்துக்கொண்டு ஆக்ஷிபுரிந்து வருபவர் **மிஸ்டர் சிட்னிட்மான்** என்னும் பிரபு இவருக்கு மேலாக அமெரிக்காவில் **மிஸிஸ் ரிச்சர்ட்கிங்** என்னும் ஸ்திரீ 300-மைல் விஸ்தீரண கம்பிசுற்றி வயல் கட்டி சுமார், 2-லக்ஷம் கால் நடைகளை வைத்து நடத்தி வருகின்றனள். அக்கால் நடைகளை மேய்க்க 300-பையன்களமர்த்தப்பட்டிருக்கின்றனர். இவள் தனது விடுதியை விட்டுவயல்களைவந்து பார்க்கவேண்டுமானுல் 13மைல் சவாரி வரவேண்டியதாகவிருக்கிறதாம். இவளுக்கு இரண்டாவதாக வயல் அரசராகவிருப்பவர் அமெரிக்காவிலுள்ள **மிஸ்டர் ஜான் நியூமான்** இவர் அங்கு (பட்டர் கிங்) வெண்ணெய் அரசரென்றழைக்கப்படுகின்றனர்.

---

## பத்திரிகை வரவு.

மைலாப்பூர் ஜெனரல் சப்ளைஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப்படும் "விவேக போதினி" என்னும் மாதாந்தப் பத்திரிகையின் ஜூலை, ஆகஸ்டு மாத சஞ்சிகைகளை வந்தனத்தோடு வரப்பெற்றோம். இதில் தமிழ் நாட்டு ஜனங்களுக்கு மிக்க உபயோகமுள்ள, வியவசாயம், கைத்தொழில், நீதிகளைப் புகட்டும் சிறு கதைகள், மத சம்மந்தமான வியா

ஸங்கள், சுகாதார விதிகள், நாவல்கள், வர்த்தமானங்கள், வானசாஸ்திரங்கள் முதலிய விஷயங்கள் வரையப்பட்டிருப்பதோடு, ஆகஸ்டு மாத சஞ்சிகை மாட்சிமைதங்கிய நமது புதிய சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி இவர்களுடைய அழகிய உருவப் படங்களுடன் வெளிவந்திருக்கிறது. இப்பத்திரிகை தமிழறிந்த ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்கள் கையிலும் இருந்து பயனளிக்கத் தகுந்தது என்னலாம்.

---

கீழ்நத்தத்திலிருந்து வெளிவரும் 'Self-Culture' என்னும் ஆங்கில மாதாந்தப் பத்திரிகையின் கடந்த, மே, ஜூன் மாதத்திய சஞ்சிகைகள் வரப்பெற்றோம். இச்சஞ்சிகைகளில் சர்வகலா சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், மானத பூசை, வேதாந்தம், அந்தரங்கக்கலைகள் முதலிய பல அரிய பெரிய விஷயங்கள் அனந்தம் அடங்கியிருக்கிறது. இதின் வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூபாய் மூன்றுதான். இப்பத்திரிகையை நம்மன்புகூர்ந்தனுப்பிய பத்திராதிபர் டாக்டர் K. T. ருமஸர்மி அவர்களுக்கு நமது மனப் பூர்வமான வந்தனமளிக்கின்றோம்.

---

பிரெஞ்சு இந்தியாவின் தலை நகராகிய புதுவையிலிருந்து வெளிவரும் 'கர்மயோகி' என்னும் இனிய தமிழ் மாதாந்தப் பத்திரிகையின் கடந்த பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களின் சஞ்சிகைகள் கிடைக்கப்பெற்றோம். இதில் மகா சக்திக்கு விண்ணப்பம், இந்து தர்மத்தின் ஜீவதத்துவங்கள், பகவத்கீதை, சித்தசுத்தி, ஜப்பான் சரித்திரம், தாமகேது, ராஜப் பிரதிநிதி சட்டசபை, சுவாமி விவேகாநந்தரின் உபந்நியாஸம், உருதி, காளிக்கு சமர்ப்பணம், உபநிஷதார்த்த தீபிகையும், இன்னும் பல அரிய வியாஸங்களும் வரையப்பட்டிருக்கிறது. இதின் வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூபாய் 2-தான். இப்பத்திரிகையை அன்புடன் மக்கனுப்பிய பத்திராதிபர் ஸ்ரீஜத், பாரதியாரவர்களுக்கு பன்முறையும் வந்தனம் செலுத்துகிறோம்.

---

சாமான் வரவு :—இவ்வூரிலுள்ள C. ராஜம் & கம்பெனியால் அனுப்பப்பட்ட 'Soap'ம் 'Candels'ம் வந்தனத்தோடு வரப்பெற்றுக்கொண்டோம். அவைகள் நன்றாய் தயார் செய்யப்பட்டிருக்கிறது. மேல்நாட்டு மெழுகுவர்த்திக்கு இதை எவ்விதத்தும் நிகராகவே சொல்லலாம்.

---

**"A conundrum which gives the following sentence only if solved"** *i.e.*

"GOD SAVE THE EDITOR"

"VAIDYA BODHINI"

There are as many words as the "Feb" of leap year contains.

All of them are of five letters each.

Thirteen of those are of "Indian Towns",

Two are "colours" where as Three are "Peninsulas"
One in "Asia" others in "Europe"
Without the "sixth" we can't have "seven"
Without the "seventh" we can't live in "North"
Without the "tenth" we can't go off of "house"
Without the help of "Eleventh" we can't "Travel"
Without the help of "Ten" + "Seven"
Difficult to have the "Truth" for "Truth"
All had gone the "Remain" must follow,
Of these, the first is "Wigan" the last is "Whist"
Middle is equal to "Two Tens" in total number.
Which make the word "Lodge" without fail
All had gone only "Remain Three"
Of these the first is "Index" The last is "Price"
Where as the middle is "Mahio"

*N. B.* Readers are requested to give the answer words in order and not to "repeat the same given word and all the "answer" letter must be in the middle of each word.

"Another conundrum in the next number"

V. A. KESAVAN.

குறிப்பு :— சிலாங்கூரைச்சேர்ந்த காபாரிலிருக்கும் நமது பத்திராகாநேயர்களில் ஒருவரான மிஸ்டர் P. கந்தையா அவர்கள் நமது பத்திரிகை விஷயமாய் அசிரத்தையாய் இருப்பதும் ஆச்சரியமே!

---



மகா மக மகா வைபவம் அல்லது குடந்தைப்புராணம்.

கும்பகோணத்தில் 12-வருஷங்களுக்கொருதரம் நடைபெறும் மகாமக தீர்த்தம், க்ஷேத்திரம், மூர்த்தி முதலிய வைபவங்களையும் ஒ[illegible]வாரு சிவஸ்தலம், விஷ்ணுஸ்தலம் முதலியவற்றின் ஆதி[illegible]ந்தி விபரத்துடனும், பாமரர்களுக்கும் ரஞ்சிதமாயும், சுருக்[illegible]ம் பஞ்ச குரோச ஸ்தலங்களின் பிரபாவங்களையும் கூறப்[illegible]றுள்ள இச்சிறிய செந்தமிழ்நூல் ஒவ்வொரு ஸ்திரீ புருஷ[illegible]கையிலும் இருப்பது மிகவும் அவசியமாகும். விலை அணா 1.

[illegible]புத்தகம் வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாசத்தி[illegible]ணா ஸ்டாம்பு அனுப்பினால், தபால் மூலமாய் புஸ்த[illegible] அனுப்பப்படும்.

[illegible]மானேஜர் :—வைத்திய போதினி ஆபீஸ், கும்பகோணம்.

நமது பத்திரிகையின் அபிவிருத்தி கருதிய திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாண தேசிக பண்டார சன்னதியவர்கள் ரூபாய் 50 கொடுப்பதாக வாக்களித்து அதற்கட்வான்ஸாக ரூபா 15 கொடுத்திருப்பதாக இதற்கு முந்திய சஞ்சிகைகளில் சொல்லியிருக்கிறோம், அதன்பிறகு 15-7-10-ல் ரூபாய் 20, மஹா சன்னிதானம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். பால பருவமுடைய நமது பத்திரிகை சுக்கில பக்ஷ சந்திரன்போல் ஜொலித்து தமிழ் நாடெங்கும் உலாவி வருமாறு, நினைத்த காரியங்களை அதிவிரைவில் முடிக்கவல்ல சன்னிதானம் அவர்கள் உதவி புரிவார்களென்று உறுதியாக நம்புகிறோம். அடியில்கண்ட சந்தாத்துகைகளை வந்தனத்தோடு வரப்பெற்றோம்.




| | | | |
|---|---|---|---|
| Mr, | M. ராமஸ்வாமி ஐய்யர் ரூ | 1 | 0 |
| ,, | சி. கு. அ. சுப்பிரமணிய செட்டியார் | 1 | 0 |
| ,, | S. M. P. அல்காந்தர் | 1 | 0 |
| ,, | A. கார்த்திகேச பிள்ளை | 1 | 0 |
| ,, | நஞ்சுண்டப்ப உடையார் | 1 | 0 |
| ,, | V. ராமசந்திர நாயுடு | 1 | 0 |
| ,, | கோபாலஸாமி ரெகுநாத ராஜாளியார் | 1 | 0 |
| ,, | சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள் | 1 | 0 |
| ,, | S. வேதாந்த தேசிக ஐயங்கார் | 1 | 0 |
| ,, | R. வெங்கிடுசாமி ராஜு | 1 | 0 |
| ,, | T. S. Fernando. | 1 | 0 |
| ,, | T. M. அங்குசாமி பிள்ளை | 1 | 0 |
| ,, | சாது அண்ணாமலை சுவாமி | 1 | 0 |
| ,, | மகம்மது யாகூப் சாயபு | 1 | 0 |
| ,, | K. லெக்ஷ்மண பிள்ளை | 1 | 0 |
| ,, | N. ரெகுபதி ஐயங்கார் | 1 | 0 |
| ,, | C. தொரஸாமி ஐயங்கார் | 1 | 0 |
| ,, | விஸ்வநாத ஐயர் | 1 | 0 |
| ,, | A. பொன்னுஸாமி பிள்ளை | 1 | 0 |
| ,, | C. I. அப்பாதுரை பிள்ளை | 1 | 0 |
| ,, | V. B. வெங்கடேசம் செட்டியார் | 1 | |
| ,, | C. பெரியஸாமி பிள்ளை | 1 | 0 |
| ,, | T. ஆழ்வார் ஐயா | 1 | |
| ,, | M. அபிரகாம் பண்டிதர் | 1 | |
| ,, | M. A. சுப்பிரமணியஐயர் | 1 | |
| ,, | R. ஸ்ரீனிவாச ஐயங்கார் | 1 | |
| ,, | A. சின்னஸாமி நாயுடு | 1 | |
| ,, | T. ராமானுஜம் | 1 | |
| ,, | J. John. | | |
| ,, | M. N. சிங்காரம் பிள்ளை | | |

அங்கஅமைப்பின் அஸ்திபந்தனங்களைக் காண்பிக்கிற பட